## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## மூன்றாம் பத்து

### ஒன்பதாம் திருமொழி - சலங்கொண்ட
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 2. திருவைகுந்த விண்ணகரம்

** சலங்கொண்ட இரணியனது அகல் மார்வம் கீண்டு *
தடங்கடலைக் கடைந்து அமுதம் கொண்டு உகந்த காளை *
நலங்கொண்ட கருமுகில் போல் திருமேனி அம்மான் *
நாள்தோறும் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
சலங்கொண்டு மலர் சொரியும் மல்லிகை ஒண்செருந்தி *
சண்பகங்கள் மண நாறும் வண்பொழிலின் ஊடே *
வலங்கொண்டு கயல் ஓடி விளையாடு நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 1

திண்ணியதோர் அரி உருவாய்த் திசை அனைத்தும் நடுங்கத் *
தேவரொடு தானவர்கள் திசைப்ப * இரணியனை
நண்ணி அவன் மார்வகலத்து உகிர் மடுத்த நாதன் *
நாள்தோறும் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
எண்ணில் மிகு பெருஞ்செல்வத்து எழில் விளங்கு மறையும் *
ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர் *
மண்ணில் மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 2

அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளும் எல்லாம் *
அமுது செய்த திருவயிற்றன் அரன் கொண்டு திரியும் *
முண்டமது நிறைத்து அவன்கண் சாபமது நீக்கும் *
முதல்வன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
எண்திசையும் பெருஞ்செந்நெல் இளந்தெங்கு கதலி *
இலைக்கொடி ஒண்குலைக் கமுகொடு இசலி வளம் சொரிய *
வண்டு பல இசை பாட மயில் ஆலு நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 3

கலை இலங்கும் அகலல்குல் அரக்கர் குலக் கொடியைக் *
காதொடு மூக்குடன் அரியக் கதறி அவள் ஓடி *
தலையில் அங்கை வைத்து மலை இலங்கை புகச் செய்த *
தடந்தோளன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
சிலை இலங்கு மணிமாடத்து உச்சி மிசைச் சூலம் *
செழுங்கொண்டல் அகடிரியச் சொரிந்த செழுமுத்தம் *
மலை இலங்கு மாளிகை மேல் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 4

மின் அனைய நுண்மருங்குல் மெல்லியற்கா * இலங்கை
வேந்தன் முடி ஒருபதும் தோள் இருபதும் போய் உதிர *
தன் நிகரில் சிலை வளைத்து அன்று இலங்கை பொடி செய்த *
தடந்தோளன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
செந்நெலொடு செங்கமலம் சேல் கயல்கள் வாளை *
செங்கழுநீரொடு மிடைந்து கழனி திகழ்ந்து எங்கும் *
மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 5

பெண்மை மிகு வடிவு கொடு வந்தவளை * பெரிய
பேயினது உருவு கொடு மாள உயிர் உண்டு *
திண்மை மிகு மருதொடு நற்சகடம் இறுத்து அருளும் *
தேவன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
உண்மை மிகு மறையொடு நற்கலைகள் நிறை பொறைகள் *
உதவு கொடை என்றிவற்றின் ஒழிவில்லா * பெரிய
வண்மை மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 6

விளங்கனியை இளங்கன்று கொண்டு உதிர எறிந்து *
வேல் நெடுங்கண் ஆய்ச்சியர்கள் வைத்த தயிர் வெண்ணெய் *
உளம் குளிர அமுது செய்து இவ்வுலகுண்ட காளை *
உகந்து இனிது நாள்தோறும் மருவி உறை கோயில் **
இளம்படி நற்கமுகு குலைத் தெங்கு கொடிச் செந்நெல் *
ஈன்கரும்பு கண்வளரக் கால் தடவும் புனலால் *
வளங்கொண்ட பெருஞ்செல்வம் வளரு மணி நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 7

ஆறாத சினத்தின் மிகு நரகன் உரம் அழித்த *
அடல் ஆழித் தடக்கையன் அலர்மகட்கும் அரற்கும் *
கூறாகக் கொடுத்தருளும் திருவுடம்பன் * இமையோர்
குல முதல்வன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
மாறாத மலர்க் கமலம் செங்கழுநீர் ததும்பி *
மது வெள்ளம் ஒழுக வயல் உழவர் மடை அடைப்ப *
மாறாத பெருஞ்செல்வம் வளரு மணி நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 8

வங்க மலி தடங்கடலுள் வானவர்களோடு *
மாமுனிவர் பலர் கூடி மாமலர்கள் தூவி *
எங்கள் தனி நாயகனே! எமக்கு அருளாய் என்னும் *
ஈசன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச் *
சேல் உகளும் செழும்பணை சூழ் வீதி தொறும் மிடைந்து *
மங்குல் மதி அகடுரிஞ்சு மணிமாட நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 9

** சங்கு மலி தண்டு முதல் சக்கரம் முன் ஏந்தும் *
தாமரைக்கண் நெடிய பிரான் தான் அமரும் கோயில் *
வங்க மலி கடல் உலகில் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகர் மேல் வண்டறையும் பொழில் சூழ் **
மங்கையர் தம் தலைவன் மருவலர் தம் உடல் துணிய *
வாள் வீசும் பரகாலன் கலிகன்றி சொன்ன *
சங்கமலி தமிழ் மாலை பத்திவை வல்லார்கள் *
தரணியொடு விசும்பாளும் தன்மை பெறுவாரே 10

**அடிவரவு:** சலம் திண்ணியது அண்டமும் கலை மின் பெண்மை விளங்கனியை ஆறாத வன்ங்கம் சங்கு திருமடந்தை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---